**கவனிக்க.-** 2019.05.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2126 - 2019 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2019.05.31

2126 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1028 | வரவு செலவுக் கூற்றுகள் | 1038 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1032 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1044 |


**கவனிக்க.-** (i) இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2019, மே 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2019, மே மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## பிங்கிரிய பிரதேச சபை

### தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி அற்ற III ஆந் தரத்திலான பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளல்.

பிங்கிரிய பிரதேச சபையில் வெற்றிடமாகி காணப்படுகின்ற கீழ்க் காணப்படுகின்ற ஆரம்ப பிரிவின் பதவிகளுக்கு தகுதியுடையோரை தேர்ந்தெடுப்பதற்காக தகைமையுடைய பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நிரந்தரமாக குடியிருப்பவர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவி ப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான குறைந்த பட்ச கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப தேர்ச்சியற்ற | | | | |
| 01 | சுகாதார தொழிலாளர் | 03 | அ. நி. சு. 3/2016 பி. எல். 1-2016 ரூ. 24,250.00- 10X250- 10X270- 10X300- 12X330- ரூபா 36,410.00 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | அலுவலக பணி உதவியாளர்கள் | 01 | | கல்விப் பொது சான்றிதழ் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்த பட்சம் இரண்டு (02) பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) |
| 03 | நூலக உதவியாளர்கள் | 03 | | |
| 04 | குளாய் இயக்குனர் | 01 | | |
| 05 | தொழில் துறை தொழிலாளி | 04 | | |
| 06 | சுகாதார தொழிலாளி (ஒப்பந்த அடிப்படையில்) | 06 | | |
| ஆரம்ப தேர்ச்சி பெற்ற | | | | |
| 07 | கனரக வாகன இயந்திர செயற்பாட்டாளர் | 01 | அ. நி. சு. 3/2016 பி. எல். 1-2016 ரூ. 25,790.00- 10X270- 10X300- 10X330- 12X350- ரூபா 38,990.00 | **வெளி விண்ணப்பதாரிகளுக்கு** 1. கல்விப் பொது சான்றிதழ் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் விசேட சித்தியுடன் 06 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர) குறைந்த பட்சம் ஒரே அமர்வில் 05 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொ. இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் |
|---|---|---|---|---|
| | | | | **உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br><br>2. உரிய நிறுவனத்தில் நிரந்தர பதவியில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட 08 தரத்தில் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**ஏனைய தகைமைகள்**<br><br>1. A வகுப்பு சாரதி உரிமப்பத்திரம் இருத்தல் வேண்டும்.<br><br>2. வாகன சாரதியாக மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்). |

**02. ஆட்சேர்ப்பு முறை - :** விண்ணப்பப் படிவம் சமர்பிக்கப்பட்டுள்ள மற்றும் சேர்த்துக் கொள்வதற்கு தேவையான ஆகக் கூடிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் யாவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உற்படுத்தி, தகைமைகளை பரிசீலிக்கப்பட்டதன் பின்பு ஆட்களை சேர்த்துக் கொள்ளப்படுவர். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் - :**

3.1 இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. (ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசினால் எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டு நியமனம் வழங்கப்படும்)

3.2 தேர்ந்தெடுக்கப்படுவது மூன்று ஆண்டு (03) நன்னடத்தை காலத்திற்கு உள்ளடங்களாகும். அக் காலத்தினுள் தமது கடமைகள் நன்னடத்தைகள் மற்றும் வரவு மகிழ்ச்சிகரமாக கொண்டு நடாத்தப்பட்டிருத்தல் மற்றும் முதலாவது தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் நன்னடத்தை காலத்தின் இறுதியில் சேவையில்/பதவியில் உறுதிப்படுத்தப்படும்.

3.3 அரச மொழி கொள்கைக்கு உடன்படல் வேண்டும்.

**04. பொது நிபந்தனைகள் - :**

4.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.3 நல்லொழுக்கமும் நல்லாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.4 தண்டச் சட்டக் கோவைக்கு அமைய நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு தண்டனை பெறாதிருத்தல் வேண்டும்.

4.5 விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குறைந்த பட்சம் மூன்று (03) ஆண்டுகள் நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். (குடியிருப்பு பற்றி கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழினை பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**05. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

5.1 இவ் அறிவித்தலில் மாதிரிப் படிவப்படி A4 அளவிலான கடதாசியில் இரு பக்கத்தினையும் உபயோகித்து ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 2019.06.21 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் "செயலாளர், பிரதேச சபை, பிங்கிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

5.2 விண்ணப்பப் படிவத்தினை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியினை குறிப்பிடப்பட வேண்டும்.

5.3 தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவை விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பப்படிவத்தினை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

5.4 விண்ணப்பப் படிவம் A4 அளவிலான கடதாசியில் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் புகைப்பட பிரதியினை இணைத்து அனுப்ப வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சையின் போது முதல் சான்றிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) குடியிருப்பினை உறுதிப்படுத்துவதற்காக அண்மையில் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்) ;
(ஈ) அண்மையில் பெற்றுக் கொண்ட நல்லொழுக்கச் சான்றிதழ் இரண்டு. (ஒரு சான்றிதழ் கிராம அலுவலரிடத்தில் பெற்றுக் கொண்டதாக இருத்தல் வேண்டும்) ;
(உ) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(ஊ) சேவைச் சான்றிதழ் (தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு) ;
(எ) அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்று.

**06.** விண்ணப்பப் படிவம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பு காலதாமதித்தல், இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் அதிகாரம் மற்றும் ஏனைய ஏதாவதொரு விடயம் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பிரதேச சபையின் செயலாளருக்கு உரியதாகும்.

ஏ. ஏ. ஜயசிறி,
செயலாளர்,
பிங்கிரிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிங்கிரிய,
2019, மே 15.

அலுவலக உபயோகத்திற்காக

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிங்கிரிய பிரதேச சபை**

.................................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................

முதலெழுத்துக்களினால் அடையாளப்படுத்தப்படும் பெயர்கள் : ......................................................

2. நிரந்தர குடியிருப்பு மாவட்டம் : ......................................................................................

3. நிரந்தர குடியிருப்பு பிரதேச சபை அதிகார பிரிவு : .......................................................

4. பிரதேச செயலாளர் பிரிவு : ............................................................................................

5. நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………

6. ஆண் /பெண் : …………………………………………………………………………

7. பிறந்த திகதி : ஆண்டு : …………… மாதம் : …………… திகதி : ……………

2019.06.21 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் …………… மாதங்கள் …………… நாட்கள் ……………

8. இலங்கைப் பிரசையாவது பிறப்பிலா /பதிவு மூலமாகவா என்பது பற்றி : ………………

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்)

i. பரீட்சையின் பெயர் : ……………………………………………………………

ii. பரீட்சை இலக்கம் : ……………………………………………………………

iii. பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் : ……………………………………………………………

iv. சித்தியடைந்த பாடங்கள் : ……………………………………………………………

| | பாடங்கள் | சித்தி | | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

10. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : …………………………………………………………………………………

11. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? :

12. தொழிற் தகைமைகள் :

1. ………………………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………………………

3. ………………………………………………………………………………………………………

4. ………………………………………………………………………………………………………

5. ………………………………………………………………………………………………………

*13.* இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் பிழையற்றவையும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றி உடன்படிக்கைப் படி என்னால் பொய்யான தகவல்கள் தெரிவித்துள்ளது பற்றி உறுதிப்படுத்தப்படுமாயின் நியமனம் கிடைப்பதற்கு முன் தெரியவந்தால் தகைமை அற்றவர் என்றும் நியமனம் கிடைத்த பிறகு தெரியவந்தால் பதவி நீக்கப்படுவதற்கு உடன்படுவது பற்றி நான் அறிவேன்.

................................ ....................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி. ....................................................தற்போது இத் திணைக்களத்தில் /நிறுவனத்தில் ..........................ஆக பணியாற்றுகின்றார். இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் இவரை தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது. இவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படுத்தப்படவில்லை என்பதனை இத்தால் உறுதிப்படுத்துவதுடன், இவ் விண்ணப்பப் பத்திரத்தினை நான் சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

........................... .....................................................

திகதி திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .....................................................

பதவி : .....................................................

திகதி : .....................................................

*05 - 927*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## குண்டசாலை பிரதேச சபை

ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம் 3 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு ஏற்ப இங்கு கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையின் ஆலோசனையொன்று 2019.04.11 ஆந் திகதி 5/13 இலக்க ஆலோசனை ஒரு மித்த கூட்டத்தின் கீழ் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ரஞ்சர அக்மீமன,
தலைவர்,
குண்டசாலை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குண்டசாலை,
2019, மே 03 ஆந் திகதி.

### அட்டவணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் இடைநேர் விளைவன ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2018.09.25 ஆந் திகதியையும் 2090/4 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக்கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய துணை விதிகளைக் குண்டசாலை பிரதேச சபை நிருவாகப் பிரிவுக்கான துணை விதிகளாகச் செயற்படுத்துதல் வேண்டுமென பொதுச் சபைக் கூட்டத்தில் பரிந்துரைக்கிறேன்.*

*05 - 842*

---

### மாவனல்லை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) மற்றும் 24(2) ஆம் உறுப்புரைகளின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேச சபையினால் இங்கு கீழவரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள் மாவனல்லை பிரதேச சபைக்கு உரியவையென இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*தற்போது பிரதேச சபையினால் அளவையிடப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இந்தப் பாதைகள் தொடர்பாக, குறிப்பிட்ட காணிகளின் உரிமையாளர்கள் என உரிமை கோருவோர்களின் மூலம் ஏதேனும் எதிர்ப்புக்கள் விடுக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முன் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படுதல் வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றோம்.*

*எச்.பி.சீ.கே. ஜயவன்தல,*
*தலைவர்,*
*மாவனல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2019, மே 14.*

### அட்டவணை 01

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | சமகி மாவத்தை |
| பாதையின் ஆரம்பம் முதல் முடியும் வரை | : | இஹல மாவெலையில் மேற் பகுதியில் இருந்து வீடுகள் வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | மாவெல 25D |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 300 மீற்றர், அகலம் - 08 அடி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.*

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | யூ.ஜீ. செனவிரத்ன | திதுலவத்த |
| 2. | திரு. | எஸ்.ஜ. அதபத்து | வெட்டகுளியாயவத்த |
| 3. | திரு. | எம்.ஏ.ஏ. பொடிமஹத்தயா | வெட்டகுளியாயவத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | டப்ளியு.ஏ.எஸ். சமரநாயக்க | வெட்டகுளியாயவத்த |
| 2. | திரு. | எஸ்.ஐ. அத்தபத்து | வெட்டகுளியாயவத்த |
| 3. | திரு. | எம்.ஏ.ஏ. பொடிமஹத்தயா | வெட்டகுளியாயவத்த |

**அட்டவணை 02**

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | பெலிகஹ சந்தியில் இருந்து தனகிரிகல விகாரை வரையுள்ள பாதை |
| பாதையின் ஆரம்பம் முதல் முடியும்வரை | : | பெலிகஹ சந்தியில் இருந்து தனகிரிகல விகாரை வரையுள்ள பாதை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 18B தாஸ்வத்த |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 180 அடி, அகலம் - 08 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | நிமல் குணரத்ன | புஸ்ஸேபிட்டியதெனிய |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதிவரைபாதையின் வலப்பக்கமாகவுள்ளகாணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு. | பீ.ஆர்.ஆர். தாஸ்வத்த | புஸ்ஸேபிட்டிய வத்த |

**அட்டவணை 03**

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கெதேகும்புர பாதை |
| பாதையின் ஆரம்பம் முதல் முடியும்வரை | : | நாதெனியில் இருந்து கணேதன்னை வரையான பாதை (முடிவு - கால்வாய்) |
| கிராம அலுவலர் பிரிவு | : | இலக்கம் 29 ஹிங்குல |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | நீளம் - 106.40 மீற்றர், அகலம் - 08 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| | | உரிமையாளரின் பெயர் | காணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திருமதி | ராஜூ சுபத்திரா | கெதே அஸ்ஸெத்தும கும்புர |
| 2. | திரு. | மொஹம்மட் ஹாசிம் அப்துல் ஷகூர் | கெதே அஸ்ஸெத்தும கும்புர |

05 -901

## மத்துகம பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(3) ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச சபையினால் இலக்கம் 1581 மற்றும் 2018.10.12 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியில் iv (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வீதிகளுக்கு இக்கால எல்லைக்குள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. என்பதனால் மத்துகம பிரதேச சபைக்கு உரித்துடைய வீதிகள் என உறுதிப்படுத்துவதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.*

மெரில் முனசிங்க,
தலைவர்,
மத்துகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மதுகம,
2019, மே 15.

**அட்டவணை**

| தொடர் இல. | வீதியின் பெயர் | வீதியின் நீளம் மீற்றர் | வீதியின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | யட்டோவிட்ட திமுத்து மிஹிரி மாவத்தை | 90 | 3.00 | மத்துகம யட்டோவிட்ட பாதை | பிலிங்கஹவத்த கெட கெரெல்ல மாவத்தை | 805 A யட்டோவிட |
| 2 | பொந்து பிட்டிய மெஸ்ஸ பெதிஹேன வீதி | 1700 | 4.50 | அமுத்கம மத்துகம பிரதான வீதி | பொந்துபிட்டிய மெஸ்ஸபெந்திஹேன | 77 B பொந்துபிட்டி |
| 3 | ஆந்தாவல மஹாவத்த வீதி | 250 | 3.00 | ரிட்டிகிட்டிய மீகம வீதி | M.A. பிரதீப் வசந்த அவர்களின் காணி | 776 ஆந்தாவல |
| 4 | பக்மீகாஹலந்த வீதி | 175 | 4.57 | மத்துகம அகலவத்த பிரதான வீதி | வைத்தியர் நாளக ஜயசிங்க அவர்களின் காணி | 805 B வேத்ததேவ |

05 – 848

---

## மஹநுவர கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவதுபிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவதுபிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் மஹநுவர கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள பாதைகள் மஹநுவரகடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகளென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்டவேண்டுமெனின், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத*

காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின் படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் தொடர்பில் எதிர்ப்புகள் முன்வைக்கப்படவில்லையெனின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் மஹநுவரகடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டுவரும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஆர். எம். பீ. டப்ளிவ். எம். எஸ். பி. யட்டவர,
தலைவர்,
மஹநுவர கடவத் ஸத்தர மற்றும்
கங்கவட்டகோறளே,
பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மஹநுவரகடவத்ஸத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே,
அம்பிட்டிய.

| தொ. இல. | பாதையின் பெயர் | கிராம அலு வலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடது புறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஹூரியகொல்ல ஹேனவத்த பாதை | 279 மாளிகா தென்ன | கண்டி ஹாரகம பிரதான வீதி | லொட் 110 CM 320 94 Block 05 | டி.எம்.ஹேரத் பொன்சலேட் எச்.எம்.பி. லக்மாலி பண்டார கே. பண்டித ரத்ன | டி.பி.எஸ். ஜயசேகர<br>ஆர்.டப்ளிவ். எம்.என்.என். ரணசிங்ஹ<br>ஆர்.எம்.கே. ஜீ.ஜே. டப்ளிவ்.பி. ரத்நாயக்க<br>டி.எம். ஜயவர்தன<br>ஆர்.டப்ளிவ். எம்.ஆர்.ஜே. ரணசிங்ஹ<br>ஆர்.டப்ளிவ். எம்.ஆர்.ஜே. ரணசிங்ஹ | 110.68 மீற்றர் | 4.58 மீற்றர் | 1513 |

05 - 933

## யட்டிநுவர பிரதேச சபை

*யட்டிநுவர பிரதேச சபை பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக்கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய துணை விதிகளை ஏற்புச் செய்தல்*

*2094/04 மற்றும் 2018.09.25 (சனசமூக மன்றங்கள்)*

*261 ஆவது அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய யட்டிநுவர பிரதேச சபை 2019.01.25 அன்று நடந்த அதன் பொதுச் சபைக் கூட்டத்தில் 08.01 இலக்கம் கொண்ட தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஆர். என். கே. ரூபஸ்ஸர,*
*தவிசாளர்,*
*யட்டிநுவர பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*யட்டிநுவர,*
*2019, சனவரி 27.*

### அட்டவணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 261 ஆவது அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2018.09.25 ஆந் திகதியையும் 2090/4 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV(அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக் கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய துணை விதிகளை இந்தத் தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்த உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் யட்டிநுவர பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*5 - 976*

# வரவு செலவுக் கூற்றுகள்

## நாத்தண்டிய பிரதேச சபை

*நிதி வெளியீட்டினை பிரசித்தப்படுத்தல் - 2018*

*நாத்தண்டிய பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்தின் போது 05 - XIV தீர்மான இலக்கத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனையினை சபை நிறைவேற்றப்பட்டது என்று பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*டபிள்யூ. எஸ். ரொசான் நிலந்த பர்னாந்து,*
*தலைவர்,*
*நாத்தண்டிய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*நாத்தண்டிய,*
*2019, மே 15.*

**தீர்மானம்**

*1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதித் தொடரில் 216 ஆம் சட்டதிட்டங்களுக்கு அமைய கீழ்க் காணப்படும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள, கணக்காய்வு செய்யப்பட்ட நாத்தண்டிய பிரதேச சபையின் 2018.12.31 ஆந் திகதியில் முடிவுறும் இறுதி ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு அறிக்கை, 2018.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிவித்தல் மற்றும் 2018.12.31 ஆந் திகதியில் முடிவுறும் இறுதி ஆண்டிற்கான பண புழக்க அறிக்கையினை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக பிரசுரிப்பதற்கு நாத்தண்டிய பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை I**

*2018.12.31 ஆந் திகதியில் முடிவுறும் இறுதி ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு அறிக்கை*

**அட்டவணை II**

*2018.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிவித்தல்*

**அட்டவணை III**

*2018.12.31 ஆந் திகதியில் முடிவுறும் இறுதி ஆண்டிற்கான பண புழக்க அறிக்கை*

## நாத்தண்டிய பிரதேச சபை

**2018.12.31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான நிதி நடவடிக்கை அறிவித்தல்**

| செயற்பாட்டு வருமானம் | குறிப்பு | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| அரசின் பங்கு - மீள்வரும் | 01 | 90,702,192.15 | 87,957,518.84 |
| வேறு வருமானம் | 02 | 222,176,566.60 | 192,724,929.57 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | **312,878,758.75** | **280,682,448.41** |
| **செயற்பாட்டு செலவு** | | | |
| மீள்வரும் செலவு | 03 | 170,144,900.95 | 167,771,026.89 |
| **மொத்த செயற்பாட்டு செலவு** | | **170,144,900.95** | **167,771,026.89** |
| **ஆண்டிற்காக செயற்பாட்டு மேலதிகம்** | | **142,733,857.80** | **112,911,421.52** |
| மூலதன கிடைப்பனவு | 04 | 36,129,207.75 | 41,710,709.16 |
| மூலதன செலவு | 05 | 101,718,108.79 | 119,218,720.38 |
| **ஆண்டிற்கான மேலதிகம்/குறைபாடு** | | **77,144,956.76** | **35,403,410.30** |

## நாத்தண்டிய பிரதேச சபை

### *2018.12.31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான நிதி நடவடிக்கை பற்றிய அறிவித்தல்*

| | குறிப்பு | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | | | |
| சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் | 06 | 913,531,723.88 | 884,477,752.43 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| மொத்தம் | 07 | 10,181,488.62 | 7,497,658.11 |
| பணியாளர்களின் கடன் | 08 | 19,544,373.15 | 18,315,725.15 |
| கிடைக்க வேண்டியவை | 09 | 281,369,837.22 | 255,019,608.71 |
| முதலீடு | 10 | 41,664,782.64 | 45,505,562.38 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | 11 | 37,807,696.50 | 9,484,886.67 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,304,099,902.01** | **1,220,301,193.45** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நிலையான பொறுப்புக்கள் | 12 | 4,147,369.62 | 6,874,463.70 |
| நிலையற்ற பொறுப்புக்கள் | 13 | 65,450,062.74 | 76,576,690.06 |
| உரித்து | 14 | 1,234,502,469.65 | 1,136,850,039.69 |
| **மொத்த உரித்தும் பொறுப்புக்களும்** | | **1,304,099,902.01** | **1,220,301,193.45** |

## நாத்தண்டிய பிரதேச சபை

### *2018.12.31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்காக நிதி நடவடிக்கை அறிவித்தல்*

| | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் கிடைக்கப்பெற்ற நிதி நிலை** | | |
| சாதாரண செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற மேலதிகம் | 142,733,857.80 | 112,911,421.52 |
| நிதி அற்ற மாற்றங்களுக்கான இசைவு | - | - |
| தேய்மானம் | - | - |
| பணிக்கொடை ஒதுக்குதல் | - | - |
| முன்னைய வருடத்திற்கான இசைவு | (8,546,498.25) | 10,887,105.02 |
| **நடப்பு மூலதன வேறுபாடுகளுக்கு முன் செயற்பாட்டு மேலதிகம்/குறைபாடு** | **134,187,359.55** | **123,798,526.54** |
| மொத்த/கடன் பெற்றவர்கள்/மற்றைய கிடைப்பனவுகள் (அதிகரித்தல்/குறைதல்) | (26,421,927.28) | (53,233,278.20) |
| கடன் பெற உரித்துடையோர்/செலுத்த வேண்டியவை (அதிகரித்தல்/குறைதல்) | (11,126,627.32) | (21,442,693.69) |
| **01. செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற தேறிய நிதி நிலை** | **96,638,804.95** | **49,122,554.65** |

**முதலீட்டு செயற்பாட்டினால் கிடைக்கப்பெற்ற நிதி நிலை**

| | | |
|---|---|---|
| சொத்துக்களை கைப்பற்றுதல், அகற்றுதல் | (29,053,971.45) | (80,958,741.65) |
| மூலதன செலவு | (72,664,137.34) | (38,259,978.73) |
| **02. முதலீட்டு செயற்பாட்டினால் கிடைக்கப்பெற்ற தேறிய நிதி நிலை** | **(101,718,108.79)** | **(119,218,720.38)** |

**நிதி செயற்பாட்டினால் கிடைக்கப் பெற்ற நிதி நிலை**

| | | |
|---|---|---|
| மூலதன கிடைப்பனவு | 36,129,207.75 | 41,710,709.16 |
| கடன் மீள் செலுத்துதல்/கடன் கிடைப்பனவு | (2,727,094.08) | (3,728,461.62) |
| **03. நிதி செயற்பாட்டினால் கிடைக்கப்பெற்ற தேறிய நிதி நிலை** | **(33,402,113.67)** | **(37,982,247.54)** |

| | | |
|---|---|---|
| ஆண்டினுள் தேறிய நகர்வுகள் (1 + 2 + 3) | 28,322,809.83 | (32,113,918.19) |
| ஆண்டு ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | 9,484,886.67 | 41,598,804.86 |
| ஆண்டு இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை "A" | **37,807,696.50** | **9,484,886.67** |

**குறிப்பு A**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - நடைமுறை கணக்கு - 0001662471 | 35,973,679.91 | 7,726,666.96 |
| இலங்கை வங்கி - சேமிப்பு கணக்கு - 73031569 | 1,384,381.57 | 1,251,638.69 |
| முத்திரை கணக்கு | 7,240.00 | 4,186.00 |
| ஏற்காத காசோலை | 442,395.02 | 502,395.02 |
| | **37,807,696.50** | **9,484,886.67** |

5 - 930

---

**வருமான செலவினக் கூற்று**

**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை**

நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் தலைவர் கே. தச்சனாமூர்த்தி ஆகிய நான், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்துவதற்கு 2019.04.09 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்ட தீர்மான இலக்கம் 05.01 இன் படி தீர்மானிக்கப்பட்டது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

கே. தச்சனாமூர்த்தி,
தலைவர்,
ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆராச்சிக்கட்டுவ,
2019, ஏப்பிறல் 09.

**தீர்மானம்**

*1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் தொகுதியின் 216 ஆம் ஏற்பாட்டுக்கு இணங்க பின்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு, 2018.12.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று அத்துடன் 2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை பொது மக்களின் தகவல் பொருட்டு பகிரங்கப் படுத்துவதற்கு பொதுக்கூட்டம் தீர்மானித்துள்ளது.*

**அட்டவணை I**

*2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு.*

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

**2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு**

| | | 2018 | 2017 |
|---|---|---|---|
| 1. | **மீண்டு வரும் வருமானம்** | | |
| 10 | வீதவரியும்வரியும் | 7,517,125.56 | 7,320,232.09 |
| 20 | வாடகை | 9,505,303.25 | 8,854,193.00 |
| 30 | உத்தரவுப்பத்திர கட்டணங்கள் | 1,209,172.00 | 1,553,796.05 |
| 40 | சேவைகளுக்கான கட்டணங்கள் | 1,134,002.42 | 1,777,935.56 |
| 50 | குற்றப்பணமும்பிடியாணை கட்டணமும் | 8,750,033.45 | 7,242,819.56 |
| 60 | ஏனைய வருமானங்கள் | 9,285,624.41 | 10,442,889.51 |
| 70 | வருமான நன்கொடை | 30,479,031.39 | 32,152,506.50 |
| | **மொத்த மீண்டுவரும்வருமானம்** | **67,880,292.48** | **69,344,372.27** |
| 2. | **மீண்டு வரும் செலவினம்** | | |
| 01 | சம்பளமும்படியும் | 36,233,864.16 | 32,658,811.98 |
| 02 | பிரயாணச்செலவு | 339,796.10 | 244,066.60 |
| 03 | வழங்கலும்உபகரணமும் | 7,803,164.11 | 6,535,365.38 |
| 04 | மூலதன சொத்து திருத்தமும்பராமரிப்பும் | 7,094,264.88 | 11,666,304.59 |
| 05 | போக்குவரத்து, இணைப்பு,சேவைகள் | 6,017,136.93 | 6,873,818.89 |
| 06 | வட்டி செலுத்துதலும்பங்கிலாபமும் | 0.00 | 0.00 |
| 07 | நன்கொடை,உதவு தொகை,மானியம் | 202,642.54 | 190,873.74 |
| 08 | ஓய்வூதியமும்ஓய்வூதிய பணிக்கொடையும் | 99,120.77 | 120,658.33 |
| | **மொத்த மீண்டுவரும்செலவினம்** | **57,789,989.49** | **58,289,899.51** |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகாரித்த/ குறைந்த வருமானமும் செலவினமும்** | **10,090,302.99** | **11,054,472.76** |
| 3. | **மூலதன செலவினம்** | | |
| 80 | மூலதன நன்கொடை | 3,391,878.66 | 41,466,814.99 |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகாரித்த வருமானமும் மூலதன வருமானமும்** | **13,482,181.65** | **52,521,287.75** |
| 4. | **மூலதன செலவினம்** | | |
| 09 | உபகரண செலவு | 8,743,894.25 | 45,931,780.28 |
| | **மிகை அல்லது குறைவு** | **4,738,287.40** | **6,589,507.47** |

**அட்டவணை II**

*2018.12.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று*

## ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை

### 2018.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| சொத்துக்கள் | குறிப்பு | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி,உபகரணம் | 06 | 169,762,455.07 | 162,103,426.82 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 07 | 1,445,409.35 | 2,329,786.27 |
| வருமான கடன்பட்டோர் | 08 | 67,663,268.72 | 76,992,518.52 |
| ஊழியர் கடனும் முற்பணமும் | 09 | 7,173,362.69 | 5,990,632.84 |
| முதலீடுகள் | 10 | 5,365,247.07 | 7,377,258.88 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 11 | 4,397,376.84 | 2,949,982.90 |
| பெறவேண்டிய வருமானம் | | 1,000.00 | 0.00 |
| | | 86,045,664.67 | 95,640,179.41 |
| **மொத்த சொத்துக்கள்** | | **255,808,119.74** | **257,743,606.23** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| திரண்ட நிதியமும் ஒதுக்கமும் | 12 | 243,874,403.15 | 230,123,757.16 |
| | | 243,874,403.15 | 230,123,757.16 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| நடப்புப் பொறுப்புக்கள் | 13 | 11,933,716.59 | 27,619,849.07 |
| | | 11,933,716.59 | 27,619,849.07 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **255,808,119.74** | **257,743,606.23** |

**அட்டவணை III**

*2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று*

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

***2018.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று***

| | | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| | **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | சாதாரண நடவடிக்கையிருந்தான மிகை/(குறைவு) | 10,090,302.99 | 11,054,472.76 |
| | **பணமல்லாத அசைவுகளுக்கான சீராக்கம்** | | |
| | தேய்மானம்/வட்டி | - | - |
| | பணிக்கொடை ஏற்பாடு | - | - |
| | முந்திய வருட சீராக்கம் | 1,353,330.34 | (793,711.02) |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிகை/குறைவு** | **11,443,633.33** | **10,260,761.74** |
| | இருப்பு/கடன்படுநர், பிற வருமதிகள் (அதிகரிப்பு)/குறைவு | 11,041,908.68 | (18,920,383.60) |
| | கடன்கொடுநர், பிற சென்மதிகளின் அதிகரிப்பு/(குறைவு) | (15,686,132.48) | 14,148,913.52 |
| 01. | **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **6,799,409.53** | **5,489,291.66** |
| | **முதலீட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | ஆதன (கொள்ளல்)/விற்றல் | - | (27,400,289.97) |
| | மூலதன செலவினம் | (8,743,894.25) | (18,531,490.31) |
| 02. | **முதலீட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **(8,743,894.25)** | **(45,931,780.28)** |
| | **நிதி நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | மூலதன பெறுவனவு | 3,391,878.66 | 41,466,814.99 |
| | கடன் எடுத்தல்/(செலுத்தல்) | | |
| 03. | **நிதி நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **3,391,878.66** | **41,466,814.99** |
| | **வருடத்தினுள் தேறிய அசைவுகள் (1 + 2 + 3)** | **1,447,393.94** | **1,024,326.37** |
| | **வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | **2,949,982.90** | **1,925,656.53** |
| | **வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு II)** | **4,397,376.84** | **2,949,982.90** |
| | **(குறிப்பு II)** | | |
| | மக்கள் வங்கி - சிலாபம் | | |
| | பொதுக்கணக்கு - 24100150863528 | 4,341,721.79 | 2,639,121.30 |
| | ஊழியர் கடன் கணக்கு - 24100240863528 | 55,655.05 | 310,861.60 |
| | **கையிலுள்ள காசு** | **4,397,376.84** | **2,949,982.90** |

05 - 932

# நானாவித அறிவித்தல்கள்

## குச்சவெளி பிரதேச சபை

பொது அறிவித்தல் - 2019

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149, 150, 152 (1), (2), 153(1), 154(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை கீழ், தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார உரிமக் கட்டணம், வியாபார வரி என்பன குச்சவெளி பிரதேச சபையினால் விதிக்கப் படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அத்துடன் பெறுமதி சேர்வரி 15% சதவீதமும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2% சதவீதமும் மற்றும் முத்திரைத் தீர்வை 10% சதவீதம் என்பன சேர்த்து அறவிடப்படும்.*

ஏ. முபாறக்,
தவிசாளர் ,
குச்சவெளி பிரதேச சபை.
திருகோணமலை.

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாபாரம் அல்லது தொழில் விபரம் | இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | தேநீர்க் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 800.00 |
| 2. | சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 800.00 |
| 3. | தேநீரும் சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | இருப்பிட வசதியுடன் ஒரு விடுதி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | ஒரு சாப்பாட்டு விடுதியை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | ஒரு பேக்கரியை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | முடி வெட்டும் இடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | ஒரு சலவைக் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | பீடி சுருட்டு விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | மாட்டிறைச்சிக் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | ஆட்டிறைச்சிக் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | கோழி இறைச்சிக் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | மீன் விற்கும் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | ஒரு இளைப்பாறும் இடத்தையோ அல்லது விருந்தினர் விடுதியையோ வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | மினி சினிமா காட்டும் இடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | கிரவல் அல்லது கல்லுடைக்கும் ஆலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | செங்கல் ஓடுகள் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யும் அல்லது வியாபாரம் அல்லது செப்பனிடும் இடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | சீமெந்து உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

| தொ. இல. | நிரல் I<br>வியாபாரம் அல்லது தொழில் விபரம் | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு<br>750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | <br><br>750 ரூபாவிற்கு மேல் 1500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | <br><br>1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
|---|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 20. | கட்டடப் பொருட்களை விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | இரும்புப் பொருட்களை விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | பழைய இரும்புப் பொருட்களை விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | சீமெந்து 25 பொதிக்கு மேல் விற்பனைக்காக வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | மரக்காலை அல்லது கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | பனை மரக்காலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | விறகுச்சாலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | தச்சுத் தொழிற்சாலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
